DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் - தர்மர் **PW-5** வயது

த/க பெயர் தொழில்

கிராமம் தாலூக்கா

மாவட்டம்

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் தற்போது உடுமலைப்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் திருப்பூர் மாவட்டம் குடிமங்கலம் வட்டாரத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.08.2012ம் தேதி நடக்க இருந்த குரூப்-2 தேர்விற்காக விண்ணப்பித்திருந்தேன். எனக்கு பழனி முனிசிபல் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேர்வு எழுதுவதற்கு தேர்வு மையம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனக்கு வழங்கப்பட்ட ஹால்டிக்கெட்டின் எண் தற்போது ஞாபகம் இல்லை. எனக்கு 11.08.2012ம் தேதியன்று என்னுடன் எம்.எஸ்.சி படித்த வரதராஜன் என்பவர் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு, 12.08.2012ம் தேதியில் நடக்க இருக்கும் குரூப்-2 தேர்விற்கான வினாத்தாள் அவரிடம் இருப்பதாகவும், வேண்டும் என்றால் வாங்கிக் கொள்ளுங்கள் என்றும் என்னிடம் சொன்னார்.

2) என்னுடைய அசல் சான்றிதழ்களை கொண்டு வந்தோ அல்லது பணம் இருந்தால் பணத்தைக் கொடுத்துவிட்டோ வாங்கிக் கொள்ளுமாறு சொன்னார். நான் எனது

அசல் சான்றிதழ்களுடன் 1 மணிக்கு பழனியிலிருந்து கிளம்பி ஈரோட்டிற்கு மாலை 5 மணிக்கு வந்தேன். அதன் பிறகு வரதராஜனுக்கு போன் செய்தேன். அதற்கு அவர் வெளயில் இருப்பதாகவும், சிறிது நேரம் ஆகும் என்றும், சிறிது நேரம் கழித்து கூப்பிடச் சொன்னார். பக்கத்திலிருக்கும் ஒரு தியேட்டரில் சினிமா பார்த்தேன். அதன் பிறகு சுமார் 8 மணிக்கு வரதாரஜனுக்கு போன் செய்தபோது அவருடைய நண்பர்கள் ஈரோடு வழியாக வருவதாகவும், அவர்களுடன் நாமக்கல் வந்துவிடு என்று என்னிடம் சொன்னார்.

3) வரதராஜன், அவரின் நண்பரின் மொபைல் எண்ணை எனக்கு அனுப்பினார். அந்த எண்ணை நான் தொடர்பு கொண்ட போது, அந்த எண்ணுக்கு உரியவர் தாங்கள் அந்த வழியாக வருவதாகவும், என்னை சிறிதுநேரம் காத்திருக்கவும் சொன்னார். 8 மணியளவில் வரதராஜனின் நண்பர் பாஸ்கர் என்பவரும், அவருடன் இன்னொருவரும், ஓட்டுநரும், ஒரு மாருதி டைப் காரில் வந்தார்கள். அவர்களுடன் இணைந்து நாங்கள் அனைவரும் நாமக்கல் கிளம்பி சென்றோம். அவர்களிடம் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டேன். அவர்கள் கம்பத்திலிருந்து வருவதாக சொன்னார்கள். போகும் வழியில் வரதராஜனுக்கு நானும், அவரின் நண்பர்களும் மாறி, மாறி செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் திருச்சியிலிருப்பதாகவும், கரூரிலிருப்பதாகவும் மாறி, மாறி சொன்னார். 12.08.2012 ம் தேதி அதிகாலை 3 மணிக்கு வரதராஜனைத் தொடர்பு கொண்டபோது நாமக்கல் பேருந்து நிலையத்திற்கு அருகிலிருக்கும் ஒரு கம்பியூட்டர் சென்டரிலிருப்பதாகவும், அங்கு வரச் சொல்லிச் சொன்னார்.

4) கம்பியூட்டர் சென்டருக்கு அருகில் ஐய்யங்கார் பேக்கரி என்று ஒரு பேக்கரி இருந்தது. மேற்படி கம்பியூட்டர் சென்டருக்கு கீழ் நான்கு பேர் இருந்தார்கள். கம்பியூட்டர் சென்டரில் 10 அல்லது 12 பேர் இருந்தனர். வரதராஜனிடம் கேட்டபோது, அவரது நண்பர்கள், பணம் தர வேண்டும் அல்லது அசல் சான்றிதழ்களைத் தந்தால் தான் கேள்வித்தாள்களை தருவதாக சொன்னார்கள். வரதராஜனின் நண்பர்கள் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. வரதராஜனுடன் இருந்தவர்கள் சுமார் 80 லட்சம் கொடுத்து கேள்வித்தாளை வாங்கியதாக சொன்னார்கள். என்னிடம் வரதராஜன் பணம் ரூ.4 லட்சம் கொடு அல்லது சான்றிதழ்களை கொடுத்து விட்டு, கேள்வித்தாளைப் பெற்றுக் கொள் என்று

சொன்னார். நான் கொடுக்க மறுத்துவிட்டு கீழே வந்துவிட்டேன். என்னுடன் வந்தவர்கள் வரதராஜனுடன் இருந்தவர்களிடம் சான்றிதழ்களை கொடுத்துவிட்டு, கேள்வித்தாளை வாங்கியதைப் பார்த்தேன். சுமார் 4 அல்லது 5 மணிக்கு ஊருக்கு செல்ல கிளம்பி விட்டோம். நான் வரதராஜனிடம் பேச முயற்சி செய்தேன், அவர் பிசியாக இருந்ததால் பேச முடியவில்லை. மேற்படி கேள்வித்தாளை, காரில் சென்றபோது நான் பார்த்தேன், அது புகைப்பட நகலாகவும், தமிழ் வடிவத்திலும் இருந்தது. என்னை காலை சுமார் 8 அல்லது 8.30 மணிக்கு திண்டுக்கல் பைபாசில் இறக்கிவிட்டு விட்டு, அவர்கள் ஊருக்கு செல்வதாக சென்று விட்டார்கள்.

5) தேர்வு எழுதியபோது, அவர்கள் கொண்டு வந்த கேள்வித்தாளில் உள்ள கேள்விகளும், தேர்வின் போது வந்த கேள்விகளும் ஒன்றாக இருந்ததை தெரிந்து கொண்டேன். 12.08.2012 ம் தேதி மாலை சுமார் 5 அல்லது 6 மணிக்கு, மேற்படி தேர்வின் கேள்வித்தாள் தர்மபுரியில் கசிந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். 15 ம் தேதி என்னை ஆர்.டி.ஓ விசாரணைக்காக ஈரோடு அழைத்து வந்தார்கள். ஈரோடு காவல் நிலையத்தில் ஆர்.டி.ஓ என்னை விசாரித்தார். டி.ஆர்.ஓ என்னிடம் ஸ்டேட்மென்ட் வாங்கிக்கொண்டார். சிபிசிஐடியில் என்னை விசாரித்து ஸ்டேட்மென்ட் வாங்கிக் கொண்டனர். 2013 ம் வருடம் 9 வது மாதம் 20 ம் தேதி ஈரோடு JM-2 நீதிமன்றத்தில் என்னை விசாரித்து குவிமுச.164 வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் குவிமுச.164 வாக்குமூலம் என்னிடம் பெறப்பட்டது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.31** ஆகும். வழக்கு சம்பந்தமாக சிபிசிஐடி காவல் துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். வரதராஜன் என்பவரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்(25 வது எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை).

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**4, 6, 8, 9, 11, 14, 21, 22, 25, 26, 28 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

6) 12.08.2012 ம் தேதிக்கு முன்பும், அதற்குப் பிறகும் நான் TNPSC தேர்வு எழுதியுள்ளேன் என்றால், சரிதான். நான் மேற்படி தேதியில் தேர்வு எழுதுவதற்கு முன்பே

2011 ம் வருடம் TNPSC தேர்வு எழுதி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உதவியாளராக பணியில் சேர்ந்தேன். எனவே TNPSC தேர்வுகளில் தேர்வுத்தாள் கசிவதற்கு வாய்ப்பு இல்லை என்பது எனக்குத் தெரியும் என்றால், சரிதான். 11.08.2012 ம் தேதி வரதராஜன் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு அழைத்தபோது, அது தவறான விசயம் என்பதால், நான் அதற்கு துணை போகக்கூடாது என்பது எனக்குத் தெரியும் என்றால், சரிதான். மேற்படி தேதியில் வரதராஜன் அழைத்தபோது, நான் பணம் எதுவும் கொண்டு செல்லவில்லை என்றால், சரிதான். அவர் கூறிய காரணத்திற்காக சான்றிதழ்களை எடுத்துச் செல்லக்கூடாது என்பது எனக்குத் தெரியும் என்றால், தெரியாது.

7) 11.08.2012 ம் தேதி எனக்கு எந்த செல்போன் எண்ணிலிருந்து அழைப்பு வந்தது என்பதையோ, நான் எந்த செல்போன் எண்ணில் ஏற்றுப் பேசினேன் என்பதையோ சிபிசிஐடி விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். பழனியிலிருந்து கிளம்பி, மீண்டும் திண்டுக்கல் பைபாசில் இறங்கும் வரையில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் சட்டமீறல் என்பது எனக்குத் தெரியும் என்றால், நான் சட்டமீறல் என்று யோசிக்கவில்லை. நான் ஈரோடு இரண்டாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குவிமுச.164 வாக்குமூலம் கொடுத்த போது "கம்பியூட்டர் சென்டருக்கு அருகில் ஐய்யங்கார் பேக்கரி என்று ஒரு பேக்கரி இருந்தது. மேற்படி கம்பியூட்டர் சென்டருக்கு கீழ் நான்கு பேர் இருந்தார்கள். கம்பியூட்டர் சென்டரில் 10 அல்லது 12 பேர் இருந்தனர். வரதராஜனிடம் கேட்டபோது, அவரது நண்பர்கள், பணம் தர வேண்டும் அல்லது அசல் சான்றிதழ்களைத் தந்தால் தான் கேள்வித்தாள்களை தருவதாக சொன்னார்கள். வரதராஜனின் நண்பர்கள் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. வரதராஜனுடன் இருந்தவர்கள் சுமார் 80 லட்சம் கொடுத்து கேள்வித்தாளை வாங்கியதாக சொன்னார்கள். என்னிடம் வரதராஜன் பணம் ரூ.4 லட்சம் கொடு அல்லது சான்றிதழ்களை கொடுத்து விட்டு, கேள்வித்தாளைப் பெற்றுக் கொள் என்று சொன்னார். நான் கொடுக்க மறுத்துவிட்டு கீழே வந்துவிட்டேன். என்னுடன் வந்தவர்கள் வரதராஜனுடன் இருந்தவர்களிடம் சான்றிதழ்களை கொடுத்துவிட்டு, கேள்வித்தாளை வாங்கியதைப் பார்த்தேன்" என்ற விவரங்களை கூறவில்லை என்றால், சொல்ல மறந்துவிட்டேன்.

8) மேலும் மேற்படி குவிமுச 164 வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டபோது "சுமார் 4 அல்லது 5 மணிக்கு ஊருக்கு செல்ல கிளம்பி விட்டோம். நான் வரதராஜனிடம் பேச முயற்சி செய்தேன், அவர் பிசியாக இருந்ததால் பேச முடியவில்லை. மேற்படி கேள்வித்தாளை, காரில் சென்றபோது நான் பார்த்தேன்" என்ற விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. மேலும் குவிமுச.164 வாக்குமூலம் தந்தபோது "தேர்வு எழுதியபோது, அவர்கள் கொண்டு வந்த கேள்வித்தாளில் உள்ள கேள்விகளும், தேர்வின் போது வந்த கேள்விகளும் ஒன்றாக இருந்ததை தெரிந்து கொண்டேன். 12.08.2012 ம் தேதி மாலை சுமார் 5 அல்லது 6 மணிக்கு, மேற்படி தேர்வின் கேள்வித்தாள் தர்மபுரியில் கசிந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். 15 ம் தேதி என்னை ஆர்.டி.ஓ விசாரணைக்காக ஈரோடு அழைத்து வந்தார்கள். ஈரோடு காவல் நிலையத்தில் ஆர்.டி.ஓ என்னை விசாரித்தார். டி.ஆர்.ஓ என்னிடம் ஸ்டேட்மென்ட் வாங்கிக்கொண்டார்" என்ற விவரத்தை நான் கூறவில்லை என்றால், சொல்லவில்லை, மறந்துவிட்டேன்.

9)காவல் துறை விசாரணையின்போதும், குவிமுச.164 வாக்குமூலத்தின்போதும், தற்போது முதல் விசாரணையின்போதும் வினாத்தாள் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன், விடைகள் என்று குறிப்பிடவில்லை என்றால், வினாத்தாள் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன், அது விடைகளுடன் சேர்ந்து இருக்கும். குவிமுச.164 வாக்குமூலத்தில், 11.08.2012 ம் தேதி காரில் வந்த நபர்கள் தேனியிலிருந்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். குவிமுச.164 வாக்குமூலத்தில், காரின் பதிவு எண், மாடல், நிறம் போன்ற விவரங்களை குறிப்பிடவில்லை என்றால், சரிதான், மாருதி வகைக் கார் என்று சொல்லியுள்ளேன். காரில் வந்த நபர்களை அதற்கு முன்போ, அதற்குப் பின்போ நான் பார்த்ததில்லை என்றால், சரிதான். டி.ஆர்.ஓ விசாரணைக்கு, எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால், இல்லை. நகர காவல் நிலையத்தில் என்னை விசாரித்தபோது, எனது செல்போனை கேட்டு வாங்கிக் கொண்டார்கள் என்றால், சரிதான். செல்போனின் உள், வெளி அழைப்புகளை வைத்து டி.ஆர்.ஓ மற்றும் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால், இல்லை.

10) குறுஞ்செய்திகளை சரிபார்த்தார்கள். மேற்படி குறுஞ்செய்திகளை பரிசீலித்து எனது வாக்குமுலத்தை பதிவு செய்து கொண்டார்களா என்றால், வாக்குமூலம் பதிவு செய்தார்கள். குறுஞ்செய்தியின் அடிப்படையில் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. இன்று மேற்படி குறுஞ்சசெய்திகளோ, வாக்குமூலமோ என்னிடம் காட்டப்படவில்லை என்றால், சரிதான். என்னிடமிருந்து செல்போனை பறிமுதல் செய்து கொண்டார்கள். இன்று வரை மேற்படி செல்போன் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால், சரிதான். சிபிசிஐடி போலீசார், குவிமுச.164 வாக்குமூலம் பதிவு செய்வதற்காக என்னை காலை 9.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு வரச் சொன்னார்கள். வாக்குமூலம் பதிவு செய்த 4.30 மணி வரை நான் நீதிமன்றத்தில் தான் இருந்தேன் என்றால், சரிதான். என்னை காலையில் நேரடியாக நீதிமன்றத்திற்கு வரச்சொல்லிச் சொன்னதன் அடிப்படையில் பழனியிலிருந்து நேராக ஈரோடு, JM-2 நீதிமன்றத்திற்கு வந்து விட்டேன் என்றால், சரிதான்.

11) மேற்படி வாக்குமூலம் 20.09.2013 ம் தேதி பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பிறகு நான் பழனிக்குச் சென்று விட்டேன் என்றால் சரிதான். கோயம்புத்தூர் சிபிசிஐடி போலீசார் எனக்கு சம்மன் கொடுத்து, என்னை கோயம்புத்தூரில் விசாரித்தார்கள் என்றால், சரிதான். பழனிக்கும், ஈரோட்டிற்கும் 110 கி.மீ தொலைவு உள்ளது என்றாலும், பழனிக்கும், கோயம்புத்தூருக்கும் 100 கி.மீ தொலைவு உள்ளது என்றாலும், சரிதான். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது, JM-2, ஈரோடு நீதிமன்றத்தில் குவிமுச.164 வாக்குமூலம் கொடுத்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். மேற்படி விவரங்களை பதிவு செய்து, காவல் துணைக் கண்காணிப்பாளர் என்னிடம் படித்துக் காட்டினார் என்றால், படித்துப் பார்த்து விட்டு கையெழுத்து போட்டேன். சிபிசிஐடி போலீசார் என்னை 3 முறை விசாரித்தார்கள், தேதி தற்போது ஞாபகம் இல்லை.

12) ஈரோடு நகர காவல் நிலையத்தில், டி.ஆர்.ஓ என்னை விசாரித்தபோது, நகர காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் வாங்கினார்களா என்றால், இல்லை. ஆர்.டி.ஓ என்னை விசாரித்து எழுத்துப் பூர்வமாக எழுதி வாங்கினாரா என்றால், இல்லை. சிபிசிஐடி போலீசார் மற்றும் ஆர்.டி.ஓ ஆகியோர் என்னை விசாரித்தபோது, நான்

ஏற்கனவே தகுதித் தேர்வு எழுதி, வேலை வாய்ப்பிற்காக காத்திருப்பதை சொன்னேன் என்றால், சரிதான். டி.ஆர்.ஓ என்னை விசாரணைக்கு அழைத்தபோது, எதன் அடிப்படையில் என்னை அழைக்கிறார்கள் என்று சொன்னார்களா என்றால், இல்லை. 12.08.2012 தேதியிட்ட தேர்விற்கு பிறகு, ஒரு முறை TNPSC தகுதி தேர்வு எழுதினேன், ஆனால் தேர்வாகவில்லை. நான் ஏற்கனவே தேர்வாகியிருந்த பணியில் சேர்வதற்கு டிசம்பர் மாதம் 2012 ம் வருடம் எனக்கு பணியாணை வழங்கப்பட்டது. நான் பணியில் சேர்ந்த காலகட்டத்தில், இந்த வழக்கில் சிபிசிஐடி போலீசார் கூறியவாறு சாட்சியம் அளிக்க நான் நிர்பந்திக்கப்பட்டேன் என்றால், சரியல்ல. மேற்படி நிர்பந்தத்தின் அடிப்படையில் குவிமுச.164 வாக்குமூலமும், தற்போதைய சாட்சியமும் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்தவொரு நிகழ்வும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல.

<u>15 வது எதிரி மேற்படி குறுக்கு விசாரணையை தனக்காக ஏற்றுக் கொள்ளுகிறார்.</u>

<u>பிற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Deposition of Witness

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - பிரகாஷ் **PW-6** | வயது |
| த/க பெயர் | | தொழில் |
| கிராமம் | | தாலூக்கா |
| மாவட்டம் | | |

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் தற்போது வேலாயுதம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கரூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியரகம், உதவி இயக்குநர் ஊராட்சிகள் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2008 லிருந்து 2014 வரை குமாரபாளையம் SSM கலை மற்றும் அறிவியியல் கல்லூரியில் ஓட்டல் மேனேஜ்மெண்ட் துறையில் துறை தலைவராக பணிசெய்து வந்தேன். தனக்கொடி என்பவரை எனக்குத் தெரியும், அவர் அதே கல்லூரியில் உதவி நுலகராக அதே காலகட்டத்தில் பணிபுரிந்து வந்தார். மேற்படி காலகட்டத்தில், TNPSC யிலிருந்து ஏதேனும் தேர்வுகள் அறிவிக்கப்பட்டால், அனைத்து ஊழியர்களும் அதற்கு விண்ணப்பிப்போம். பின்னிட்டு, விண்ணப்பித்த பிறகு, அனைவரும் குரூப் ஸ்டடி செய்வோம்.

2) 12.08.2012 ம் தேதி நடைபெறவிருந்த குரூப்-2 தேர்விற்கு நானும், அங்கு பணிபுரிந்த ஊழியர்களும் விண்ணப்பித்திருந்தோம். எதிரி தனக்கொடியும்

விண்ணப்பித்திருந்தார். 12.08.2012 ம் தேதி காலை 8 மணிக்கு தனக்கொடி எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டார். தேர்வை நன்றாக எழுதச் சொல்லி வாழ்த்து சொன்னார். நான் தேர்வு மையத்திற்கு சென்று கொண்டிருந்தபோது, சுமார் 9 அல்லது 9.30 மணிக்கு என்னை மீண்டுமே தனக்கொடி செல்போனில் அழைத்தார். அவருக்கு இரண்டு கேள்விகளில் சந்தேகம் இருப்தாகவும், அதற்கு பதில் சொல்ல முடியுமா என்றும் கேட்டார். அதில் முதல் கேள்வி ''மு.வரதராஜனார் எழுதாத நாவல் எது'' என்று கேட்டார். அதற்கு விடை தெரியாது என்று நான் சொல்லி விட்டேன். ''225 டிகிரி கோணத்தில் திரும்பினால், எந்த கோணத்தில் திரும்பும்'' என்றும் கேட்டார், நான் அதற்கும் தெரியாது என்று சொல்லிவிட்டேன்.

3) எனக்கு கரூர் சி.எஸ்.ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டிருந்தது. நான் கேள்வித்தாளை வாங்கி பார்த்த பிறகு தான், மேற்படி தனக்கொடி சந்தேகம் கேட்ட இரண்டு கேள்விகளும் கேள்வித்தாளில் கேட்கப்பட்டிருந்ததை தெரிந்து கொண்டேன். தேர்வு முடிந்த வெளியே வந்த பின்னர் தனக்கொடியை தொடர்பு கொண்டு, தேர்வை நன்றாக எழுதியிருக்கிறீர்களா என்று கேட்டேன். அதற்கு தனக்கொடி பின்னர் கூப்பிடுவதாக சொல்லி இணைப்பு துண்டித்து விட்டார். எனக்கு அன்றைய தினமே மதியம் இந்து அறநிலையத்துறை செயல் அலுவலர் தேர்வு இருந்ததால், நான் தேர்வு அறைக்கு திரும்பி விட்டேன். தேர்வை எழுதி முடித்து விட்டு, எனது ஸ்கூட்டி வண்டியில் வைக்கப்பட்டிருந்த எனது செல்போனை எடுத்த போது சுமார் 5.30 மணிக்கு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஒரு அழைப்பு வந்திருந்தது. நான் செல்போனை எடுத்து யார், என்ன, என்று விபரம் கேட்டேன். அவர் என்னிடம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சண்முகம் என்பவர் பேசுவதாகவும், எனக்கு தனக்கொடியைத் தெரியுமா என்றும் கேட்டார். நான் தெரியும் என்று சொன்னேன். எனது வீட்டின் முகவரியைக் கேட்டார். நான் முகவரியைச் சொன்னேன். அவர் அழைப்பை துண்டித்துவிட்டார்.

4) பின்னர் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். சுமார் 6 மணிக்கு கொடுமுடி காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்து குரூப்-2 தேர்வு கேள்வித்தாள் வெளியானது

தொடர்பாக என்னை விசாரிக்க வேண்டும் என்று கொடுமுடி காவல் நிலையத்திற்கு கூட்டிச் சென்றனர். அங்கு 10 நிமிடங்கள் என்னை விசாரித்து விட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு என்னிடம் டி.ஆர்.ஓ என்னை விசாரித்தார். என்னை விசாரித்தபோது, அங்கு தனக்கொடியும், அவரது கணவர் செந்தில்குமாரும் இருந்தார்கள். என்னை விசாரணைக்கு கூட்டி வந்தபோது, செந்தில்குமாரின் நண்பர்கள் கந்தசாமி, செல்வராஜ், சுதாகர் ஆகியோர், கேள்வித்தாளை டவுன்லோடு செய்து, செந்தில்குமாரிடம் கொடுத்து, அவர் அவரது மனைவி தனக்கொடியிடம் கொடுத்தாகவும், மேற்படி கேள்வித்தாளிலிருந்துதான் மேற்படி தனக்கொடி என்னிடம் சந்தேகம் கேட்டதாகவும் தெரிந்து கொண்டேன்.

5) மேற்படி தனக்கொடி, தேர்வு மையத்திலிருந்தபோதுதான் எனக்கு போன் செய்து சந்தேகம் கேட்டுள்ளார். அந்த சமயத்தில் ரேவதி மற்றும் வித்யா ஆகியோர் உடன் இருந்துள்ளனர். மேற்படி ரேவதி மற்றும் வித்யா ஆகியோர் தான் தேர்வு முடிந்த பிறகு மேற்படி தனக்கொடியை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்ததாக பின்னர் எனக்கு தெரியவந்தது. என்னிடம் விசாரித்து விட்டு என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டனர். அதன் பிறகு கோவை சிபிசிஐடி அலுவலகத்திலிருந்து அழைப்பாணை மூலம் என்னை வரவைத்து விசாரித்தார்கள். தனக்கொடியை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும்(30 வது எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை).

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**<u>4, 6, 8, 9, 11, 14, 21, 22, 25, 26, 28 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

6) கரூருக்கும், ஈரோட்டிற்கும் 65 கிமீ தொலைவு இருக்கும் என்று சொன்னால், சரிதான். என்னை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றதாகவும், அங்கு என்னிடம் டி.ஆர்.ஓ என்னை விசாரித்தார் என்றும், என்னை விசாரித்தபோது, அங்கு தனக்கொடியும், அவரது கணவர் செந்தில்குமாரும் இருந்தார்கள் என்றும், என்னை விசாரணைக்கு கூட்டி வந்தபோது செந்தில்குமாரின் நண்பர்கள் கந்தசாமி, செல்வராஜ், சுதாகர் ஆகியோர் கேள்வித்தாளை டவுன்லோடு செய்து, செந்தில்குமாரிடம் கொடுத்து

அவர் அவரது மனைவி தனக்கொடியிடம் கொடுத்தாகவும், மேற்படி கேள்வித்தாளிலிருந்துதான், மேற்படி தனக்கொடி என்னிடம் சந்தேகம் கேட்டதாகவும் தெரிந்து கொண்டேன் என்றும், மேற்படி தனக்கொடி தேர்வு மையத்திலிருந்துதான் எனக்கு போன் செய்து சந்தேகம் கேட்டுள்ளார் என்றும், அந்த சமயத்தில் ரேவதி மற்றும் வித்யா ஆகியோர் உடன் இருந்துள்ளனர் என்றும், மேற்படி ரேவதி மற்றும் வித்யா ஆகியோர் தான் தேர்வு முடிந்த பிறகு, மேற்படி தனக்கொடியை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்ததாக பின்னர் தெரிய வந்தது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சிபிசிஐடி போலீசாரின் நிர்பந்தத்தின் பேரில் உண்மைக்கு புறம்பாக, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**15 வது எதிரி மேற்படி குறுக்கு விசாரணையை தனக்காக ஏற்றுக் கொள்ளுகிறார்.**

**பிற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**